**DEPOSITION OF WITNESS**
**In the Court of Judicial Magistrate No.I, Mettur**

**Case No : C.C. 324/2023**

**Prosecution witness : எ.ம.சா. 2** **Date : 02.03.2024**

| | |
|---|---|
| Name : கார்த்திகேயன் | Taluk : கோயம்புத்தூர் |
| Father Name : திருமூர்த்தி | Calling : டிரான்ஸ்போர்ட் |
| Village : வடவள்ளி | Age : 31 |

**(Complainant absent. Petition filed and allowed. Respondent Present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

நான் சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். எதிரி என்னை அழைத்து வந்தார் என்றால் சரிதான். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் கல்லூரிக்கு வண்டி வாடகைக்கு கொடுக்கிறேன். என் அப்பா, அம்மா என்ன தொழில் செய்கிறார்கள் என்றால் விவசாயம் செய்கிறார்கள். அவர்கள் எங்கு குடியிருக்கிறார்கள் என்றால் அவினாசி, சேவூரில் குடியிருக்கிறார்கள். என் உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் தம்பி ஒருவர். அவர் எங்கு உள்ளார் என்றால் அப்பா, அம்மா உடன் இருக்கிறார். எதிரி அவருடைய சாட்சியத்தில் என்ன சொல்லியுள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எங்கள் ஊரில் பண்டிகை இருந்தது என்று சொல்லும் நிலையில் அதற்காக ஆவணங்கள் ஏதாவது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. என்னுடைய முதல் விசாரணையில் இது என்ன மாதிரியான பண்டிகை என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மாரியம்மன் கோவில் பண்டிகை. எதிரிக்கு லண்டன் நிறுவனத்திலிருந்து தொகை

வரவேண்டியிருந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேட்டுருக்கும், கோயமுத்தூருக்கும் எவ்வளவு நேரம் பயணம் செய்யமுடியும் என்றால் 3 1/2 மணி நேரத்தில் செல்லாம். எதிரியின் நிறுவனம் கூட்டாண்மை நிறுவனமா, சுயநிறுவனமா என்ற விவரம் தெரியுமா என்றால் முதலில் கூட்டாண்மை நிறுவனம். திருமணத்திற்கு பின்னிட்டு சுயநிறுவனம். எந்த வருடத்திலிருந்து சுயநிறுவனமாக செய்து வருகிறார் என்றால் சரியாக சொல்ல இயலாது. அவருடைய நிறுவனத்தின் மூலமாக என்ன என்ன பரிவர்த்தனை செய்கிறார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் என்னுடைய நிறுவனத்தின் மூலம் மாதம் எவ்வளவு வருமானம் ஈட்டுகிறேன் என்றால் சுமார் ரூ.80,000/-. அந்த வருமானத்தில் தான் நான் வேலை ஆட்களுக்கு சம்பளம், நிறுவனம் பராமரிப்பு, வருமானவரி அனைத்து செய்யமுடியும் என்றால் சரிதான். எதிரி என்னுடைய மாமா என்பதால் நடக்காத ஒரு சம்பவத்தை நான் தவறாக சாட்சி அளிக்கிறேன் என்றும், அவரே தனது சாட்சியத்தில் எனது மாமியார் வீட்டிற்கு தான் சென்றேன் என்று சொல்லியுள்ளார் என்றும், அதை மறுத்து எதிரி என் மாமா என்பதால் என்னுடைய வீட்டில் இருந்தார் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**விசாரணை முடிக்கப்பட்டது.**

**ஒம்/-அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,**
**மேட்டூர்.**